(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 212.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2012 செத்தெம்பர் 21, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1200/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்கள் சென்ற நாடுகள் எவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வருடங்களில் அத்தகைய நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக சென்ற ஆண்களதும் பெண்களதும் எண்ணிக்கை என்னவென்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்;

(iii) அவர்களினால் ஈட்டப்பட்ட சராசரி சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த சம்பள நிர்ணயம் உள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1579/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) களுத்துரை மாவட்டத்தின் களுத்துரை பிரதான தபால் நிலையத்தில் அமைந்துள்ள உத்தியோகத்தர்களுக்கான விடுதி பெருமளவு சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில் இக்கட்டிடத்தை துரிதமாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்குத் தேவைப்படும் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1911/ ’11

3\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2001 இல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கையின் (NIRP) கோட்பாடுகளின் பிரகாரம்;

(i) தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் மாத்திரமே சுயமாக முன்வராதோர் தொடர்பான மீள்குடியேற்றங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக கலந்தாலோசித்ததன் பின்னரே மீள்குடியேற்றத்திற்கான இடம், வாழ்வாதாரம், நட்டஈடுகள், அபிவிருத்தி தொடர்பான விருப்பங்கள் ஆகியவற்றைத் தெரிவுசெய்தல் ஆகியவை நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும்;

(iii) இந்த காணி, கட்டமைப்புகள், வாழ்வாதாரங்கள் போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு மாற்றீட்டுக் காணிகளை வழங்குதல் அல்லது நட்ட ஈடாக பணத்தை வழங்குதல், மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

(iv) மாற்றீட்டுப் பெறுமதிகள் முழு காணிக்குமான நட்டஈடாக உடனடியாக வழங்கப்பட்டன என்பதையும்;

(v) காணிக்கான ஆவணப்படுத்தப்பட்ட உரித்தைக் கொண்டிராத மக்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்டனர் என்பதையும்;

(vi) பாதிக்கப்பட்ட மக்கள் தம்மை மீள்கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டதுடன் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 சனவரி முதல் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் தேசிய சுயமாக முன்வராதோர் மீளக் குடியமர்த்தல் கொள்கைக்கு (NIRP) உடன்பட்ட சந்தர்ப்பங்களை நடைமுறைப்படுத்திய முகவராண்மைகளுடனும்;

(ii) ‘தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கை’ சகல மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதான நகரங்கள் ஆகியவற்றில் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2037/ ’11

4\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திற்காக நிலக்கரியை வழங்கும் ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ள கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த ஏனைய கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மின்வலு, எரிசக்தி அமைச்சு நியமித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு நிலக்கரியை வழங்கும் மேற்படி கம்பனிக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதைம்;

(ii) அந்த மதிப்பீட்டுச் சான்றிதழை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலக்கரியை வழங்கும் உடன்படிக்கை ஆரம்பமாகும் திகதி மற்றும் அமுலிலிருக்கும் கால எல்லை யாதென்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2011 ஒக்தோபர் மாதம் வரை எத்தனை மெட்ரிக் தொன் நிலக்கரி வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்தக் காலப்பகுதிக்கென உண்மையாகவே தேவைப்படும் நிலக்கரியின் அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2219/ '12

5.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை "இலங்கையை வெற்றி பெறச் செய்வோம்" கொள்கைகளில் "ஜனசெவன" நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் அரச ஊழியர்களுக்காக நான்கு தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீடுகளில் இதுவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் எவை என்பதையும்;

(iii) இதுவரை மேற்படி தொடர்மாடி வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பவைதயும்;

(iv) அந்த வீடமைப்புத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2248/ '12

6.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை, இவர்கள் கற்றுக்கொண்டுள்ள பட்டப் பாடநெறி மற்றும் மாகாணங்கள் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையை தீர்ப்பதற்காக 2011ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையை தீர்ப்பதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், எதிர்வரும் காலத்தில் இதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(இ) இன்றேல், ஏன்?

2631/ ' 12

7.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் முன்னிலையில், பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தை மேலும் பலப்படுத்துவதாகவும் பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தடைகளை நீக்குவதாகவும் அரசாங்கத்தினால் வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மீண்டும் 2007 சர்வதேச பருவகால மீளாய்வுக் (UPR) கூட்டத்திலும் பதினேழாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதையும்;

(iii) பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் மேற்படி வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி வாக்குறுதிகள் மீறப்பட்டமையினால் அரசாங்கத்தின் நம்பகத்தன்மை சர்வதேச ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(v) இதனால் எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதப்புரைகள் மற்றும் இலங்கை பற்றிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரேரணைகள் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களின் தேவைப்பாடு விதந்துரைக்கப்பட்டுள்ளதால், பதினேழாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை தாபிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2632/ '12

8\.

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் சுகாதார திணைக்களத்திற்கு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டின் மே மாதமளவில் நாட்டில் சேவையாற்றிய குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் யாவை என்தையும்

அவர் குறிப்பிடுவார?

(இ) இன்றேல், ஏன்?

1879/ '11

9\.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் ஹபுருகல ஹொரவல வைத்தியசாலை மூலமாக சுமார் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு சேவையாற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் போதியளவு மருத்துவர்கள் இல்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக, மேற்படி வைத்தியசாலை தற்போது மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(iv) இற்றைக்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் மேற்படி வைத்தியசாலையில் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் இற்றை வரை அத்திவாரத்துடன் மாத்திரம் மட்டுப்பட்டதாயுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹபுருகல ஹொரவல வைத்தியசாலையில் நிலவி வருகின்ற மருத்துவர்களினதும் கட்டடங்களினதும் பற்றாக்குறைக்கு துரிதமாக தீர்வுகள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2137/ '11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணிப்பு உபகரணங்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iii) வழங்கப்பட்ட வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இதுவரை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீளப் பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(vi) மீளப் பெறப்பட்ட வாகனங்களின் நிலைமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு உரியவாறு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒவ்வொரு வாகனத்திற்குமென பெற்றுக் கொள்ளப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2191/ '11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பொறுப்புகள் ஒவ்வொரு துறைமுகத்துக்குமாக தனித்தனியாகவும்;

(ii) துறைமுக அதிகார சபை தங்களால் பெறப்படாத கடனுக்காக உத்தரவாதம் கொடுத்த அல்லது வங்கி உத்தரவாதம் கொடுத்த அல்லது பொறுப்புகளை வகிக்கும் சந்தர்ப்பங்களையும்;

(iii) (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட பொறுப்புகளில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான அல்லது துறைமுக அதிகார சபைக்கு உரித்தான நிலங்களின் விஸ்தீரணத்தையும்;

(ii) கொழும்பு மாவட்டத்தில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான நிலங்களின் விஸ்தீரணத்தைத் தனித்தனியாகவும்;

(iii) துறைமுக அதிகார சபையின் ஒதுக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள நிலங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும்;

(iv) துறைமுக அதிகார சபை பராமரிப்புக்காக செலவு செய்யும் நிலங்கள் அல்லது கட்டடங்களைக் கொண்ட நிலங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தேறிய இலாபத்தையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2220/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் "සැමට නිවසක්-හිතට සෙවණක්" வேலைத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தொடர்மாடி வீடுகள், மற்றும் அரசின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களை தமது வீட்டின் அறுதி உரிமையாளர்களுக்கும் வேலைத் திட்டத்தை மூன்று மாதங்களினுள் நிறைவு செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவடைந்த திகதி யாது என்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டத்தின் கீழ் தமது வீட்டின் அறுதி உரிமையைப் பெற்ற நகர்ப்புற தொடர்மாடி வீடுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மேற்கூறியவாறு வீடுகளுக்கான அறுதி உரிமையைப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1880/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல கல்வி வலயத்திற்குரிய கட்டுவன கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற மித்தெனிய முதல்நிலைப் பாடசாலையில் நிலவுகின்ற கட்டட மற்றும் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் கட்டட மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் இற்றைவரை தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைக்காக புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், கட்டடங்களை நிர்மாணிக்கும் பணிகள் எத்திகதியில் ஆரம்பிக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2138/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வோர் ஆண்டிலும் புகையிரத திணைக்களம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புகையிரத திணைக்களத்தில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2005ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை வெவ்வேறாகவும்;

(iv) மேற்படி நியமனங்களுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2192/ '11

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த இரண்டு வருடங்களில்,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு பயணங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறு விஜயம் மேற்கொண்ட நாடுகளையும்;

(iii) இவ்விஜயங்களினால் அடைந்த நோக்கங்களையும்

வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு விஜயத்தின் போதும் அமைச்சருடன் சென்ற அதிகாரிகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு விஜயத்துக்கும் உறப்பட்ட செலவினத்தை வெவ்வேறாகவும்;

(ii) மேற்கூறப்பட்ட விஜயங்களின் போது பயன்படுத்தப்பட்ட நிதி பொதுப் பணமா அல்லது விஜயம் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பணமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த ரத்னதிலக்க

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 9.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

10.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

றொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

ரன்ஜித் அலுவிஹாரே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.